## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஊனமுற்றோருக்கான தேசிய செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்றில் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயலகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் செயலகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- செயலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- செயலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டத்தின் பிரிவு 7(3) | (i) ஆளுகை சபையினால் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட வேண்டியிருந்த போதிலும் 2022 ஆண்டிற்காக 03 தடவைகள் மாத்திரம் கூட்டம் கூடப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட அரசியல் மற்றும் எரிபொருள் நெருக்கடி நிலைமை காரணமாக ஊனமுற்றோருக்கான தேசிய சபைக் கூட்டங்கள் 03 இற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | (ii)சபையின் அங்கத்தவர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடி தீர்மானங்களுக்கு அணுகுவதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொள்ளும் சிறந்த நிலைமையொன்று காணப்படாமையால் சபையின் கருமங்கள் பொருண்மையாக நிறைவேற்றுவதற்கு வசதிகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கவில்லை. அதன் மூலம் ஊனமுற்றோருக்கான தேசிய சபையின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளல் பிரதிகூலமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | தேசிய சபைக் கூட்டங்களுக்கு மேலதிகமாக உப குழுக்களின் 12 சபை அமர்வுகள் நடாத்தி இந்த குழுக்களின் பரிந்துரைகள் ஆளுகை சபைக் கூட்டத்திற்கு அனுப்பப்பட்டு தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. | விதிக்கப்பட்ட நேரத்தில் சபையின் அங்கத்தர்கள் கூடி சபையின் கருமங்களுக்காக தீர்மாணங்கள் எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 81,537,169 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 183,179 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 81,353,990 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு சுபிரி வாசனா லொத்தர் வருமானம் ரூபா 77,116,750 தொகையினால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுபிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்தில் இருந்து ஊனமுற்றோருக்காக வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 5,985,145 இற்கான தொகையொன்று மற்றும் 2022 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 90,012,050 இற்கான தொகையொன்று வீடமைப்பு உதவியாக கிடைக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 13,400,000 தொகையொன்று மாத்திரம் பெற்றிருந்ததுடன், மீதி ரூபா 82,597,195 தொகை நிலுவை வருமானம் ஆகும். இதன் காரணமாக ஊனமுற்றவர்களுக்காக வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வின் பின்னர் தேசிய லொத்தர் சபையில் இருந்து பெற வேண்டிய வருமானம் தொடர்பாக எழுத்துமூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளரின் இலக்கம் NLB/FIN/OF/03/02/ii கொண்ட 2023 மார்ச் 28 திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி திறைசேரியினால் வழங்குவதற்கு இணங்கியிருந்த மற்றும் வழங்கியிருந்த தொகை சரியானது என உறுதிப்படுத்தப்பட்டது. | நிலுவை வருமானத்தை திறைசேரியில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஊனமுற்றோருக்கு சமமான சந்தர்ப்பங்கள் வழங்கள், வலுப்படுத்துதல், நலனோம்பு மற்றும் நலன்புரிக்காக நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தேசிய மட்டத்தில் வெளிப்படை தன்மையுடன் மற்றும் முறைப்பிரகாரம் நலன்கள் சமமான தன்மையில் வழங்குவதற்கு இயலுமான வகையில் செயற்படுத்துவதற்காக ஊனமுற்றோர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட ரீதியாக பரவல், வயது கட்டமைப்பு, ஊனமுற்ற நிலைமை பொருளாதார நிலைமையை இனங்காணல் உறுதியான, சரியான, ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுப்பதற்காக ஊனமுற்ற மக்களின் தகவல்கள் அடங்கிய தரவு முறைமையொன்று தயாரித்தல் தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக் காட்டிய | சமூக நலன்கள் சபையின் மூலம் சேகரிக்கப்படும் தரவுகள் பெற்றுக் கொள்வதற்கும் சமூக சேவை திணைக்களத்தில் தயாரிக்கப்படும் தரவு முறைமை மூலம் இந்த தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | தரவு முறைமை ஒன்று செயற்படு நிலைமையில் பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அது தொடர்பாக போதியளவு மற்றும் வினைத்திறனுடன் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஊனமுற்றோரின் உரிமைகளை மேம்படுத்தல, முன்னேற்றுதல் மற்றும் பாதுகாப்புக்குகாக பொறுப்பாக இருப்பதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| | (i) ஊனமுற்றோரின் நலனோம்பினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றுதல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல். | புதிய சட்டம் ஒன்று மற்றும் சமிக்ஞை மொழி சட்டம் ஒன்றின் வரைபு தயாரித்தல் அலுவல்கள் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. நுழைவு வசதிகள் வழங்கும் வர்த்தமானி தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| | (ii) ஊனமுற்றோர் தொடர்பான உரிய சர்வதேச வெளியீடுகள் மற்றும் சாசனங்களை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என மற்றும் கடைபிடிக்கப்படுகின்றது என பொறுப்பாக இருத்தல். | சர்வதேச நியதிச் சட்டத்திற்கு இணங்க ஊனமுற்றோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டம் வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| | (iii) ஊனமுன்றோர் தொடர்பாக மற்றும் அவ்வாறான ஆட்களுக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பாக சரியான புள்ளி விபரங்கள் பேணிச் செல்லல். | ஊனமுற்றோர், ஊனமுற்றோருக்கான தேசிய செயலகத்தின் இணைய தளத்தின் அனைத்து சேவைகள் தொடர்பான விபரங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ஊனமுற்றதற்கான பிரதான காரணங்கள் எவை அவற்றை தடுத்துக் கொள்ளும் மற்றும் கட்டுப்படுதலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேம்படுத்துதல். | ஊனமுற்றோர் மற்றும் நீண்ட நாட்களாக நோய்வாய்பட்டு ஊனமுற்ற நிலைமையாதலை தடுப்பதை குறிக்கோளாக கொண்டு மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (உ) | ஊனமுற்றோரை புனர்வாழ்வு அளிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தயாரித்து | 06 பாதுகாப்பு நிலையங்களுக்காக அமைச்சரவை அங்கீகாரம் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றை மேம்படுத்துதல். | கிடைத்துள்ளது. உலக வங்கி உதவியின் கீழ் முன் பிள்ளைபருவ அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக அக்குரஸ்ஸ முன் பிள்ளைப்பருவ நிலையம் நிர்மாணிக்கும் வேலை 2022 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தம்புள்ள பாதுகாப்பு நிலையத்திற்காக காணி உரித்தாக்கும் அலுவல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பேணிச் செல்லல். | அக்குரஸ்ஸ முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்தின் இரண்டாம் கட்டமாக ஊனமுற்றோருக்கான பாதுகாப்பு நிலையம் ஒன்று நடாத்திச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (எ) | ஊனமுற்றோருக்காக தங்குமிட வசதிகளுடன் அவர்களை பாதுகாப்பதற்காக நிறுவனங்கள் அமைக்கப்பட்டு பேணிச் செல்லல் மற்றும் அவ்வாறான ஆட்களுக்கு கல்விசார் மற்றும் தொழில்சார் பயிற்கள் வழங்கள் | தற்போது சமூக சேவை திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. 06 பாதுகாப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் ஊனமுற்றோருக்கு தங்குமிட வசதிகள் வழங்குதலும் பாதுகாத்தலும் மற்றும் தேவையான பயிற்கள் வழங்களும் மேற்கொள்ள முடியுமாக உள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஏ) | ஊனமுற்றோருக்கு நுழையக் கூடியவாறு பௌதீக சுற்றாடல் ஒன்று தயாரிக்கும் வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தல் மற்றும் தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் தொடர்பாடலுக்கு நுழையும் ஊனமுற்றோருக்காக பெற்றுக் கொள்ளக் கூடிய திட்டங்கள் செயற்படுத்துதல். | 2006 இன் 01 ஆம் இலக்க ஊனமுற்றோர் தொடர்பாக நுழைவுக் கட்டளைக்கு இணங்க சர்வதேச மட்டத்தில் நியமங்களுக்கு மற்றும் விவரக் குறிப்புக்களின் படி நுழைவு/ கட்டளைக்கான வர்த்தமானி தயாரிக்கும் அலுவல்கள் மேற் கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சு, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடல் | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொண்டு பொருத்தமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவிக்கின்றேன். | |
| (ஐ) | வெளியீடுகள் வெளியிடுவதன் மூலமும் மற்றும் ஏனைய வேலைத் திட்டங்களின் மூலம் ஊனமுற்றோரின் நிலைமை மற்றும் தேவைகள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல் போதியளவாகக் காணப்படாமை. | 2022 ஆண்டு நடாத்தப்பட்ட 19 நடமாடும் சேவைகளில் மற்றும் ஆயிரம் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் 02 இல் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அலுவலக இணைய தளத்தின் ஊடாக மற்றும் முகநூலில் ஊனமுற்றோரின் கணக்கின் மூலமும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. திசெம்பர் 03 திகதி நடைபெறவுள்ள ஊனமுற்றோர் தினத்திற்கு நேரொத்ததாக வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.2 நிதியங்களின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்திற்காக கிடைக்கக் கூடிய அரச மானியங்களை பயன்படுத்தி மீதியாகும் மேலதிக காசு மீதி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 9,834,598 தொகை ஆகக் காணப்பட்டதுடன், கடந்த 04 ஆண்டு காலப் பகுதியில் அது ரூபா 5,170,082 முதல் ரூபா 12,062,703 வரையான வீச்சில் காணப்பட்ட காசு மீதிகள் வங்கி நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 19 ஆவது பிரிவிற்கு இணங்க சபைக்கு உரிய ஏதேனும் பணம் சபையினால் விதிக்கப்படுகின்ற முறையில் முதலீடு செய்வதற்கு இயலுமாக இருந்த போதிலும் கடந்த 05 வருட காலப் பகுதியில் அவ்வாறு முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த மிகைப் பணத்தை முதலீடு செய்யாமையால் | 2023 திசெம்பர் 23 திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் மிகைப் பணம் முதலீடு செய்வதற்கு பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அங்கு தீர்மானிக்கப்பட்டவாற பத்தரமுள்ள, இலங்கை வங்கியின் (உயர் தர) 05 மில்லியன் தொகை 400 நாட்களுக்காக 25 சதவீத வருடாந்த வட்டி வீதத்திற்கு மற்றும் 2 மில்லியன் தொகை 3 மாதங்களுக்காக 24 சத வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் குறிக்கோள்களுக்கு இணங்கக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

2018 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் நிதியம் இழந்துள்ள வட்டி வருமானம் அண்ணளவாக ரூபா 4,300,000 தொகை என அவதானிக்கப்பட்டது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 2018 மார்ச் 19 திகதி பதவியணிக்கான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | குறிப்பிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ப்ரேல் ஆலோசகர் பதவிக்காக தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறை, இந்த பதவி நிறுவப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அந்த நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு நடைமுறையுடன் ஒப்பீடு செய்து ஆய்வுசெய்ய போது சிற்சில விடயங்கள் திருத்தம் மேற்கொள்வதற்காக நேரிட்டமையால் அந்த விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை அங்கீகரித்துக் கொள்வதற்காக செயற்பட வேண்டும். |